# கணக்கீடு

## இலங்கை கணக்கீட்டு நியமங்களின் சட்டப் பின்னணிகள்



Start Your Learning Journey with e-thaksalawa
The National e-learning Portal for The General Education

**தேர்ச்சி : 11.0 வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் : 11.1**
**இலங்கை கணக்கீட்டு நியமங்களின் சட்டப் பின்னணிகளைப் பகுப்பாய்வு செய்வார்.**

# இலங்கை கணக்கீட்டு நியமங்களின் சட்டப் பின்னணிகள்

## இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (LKAS)
## SRI LANKA ACCOUNTING STANDERD

நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து வெளியிடுவதற்காக கணக்கீட்டு தொழில்சார் அறிஞர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வழிகாட்டப்படுகின்ற நியதிகளும், கணக்கீட்டு நடைமுறைகளும், கொள்கைகளுமே கணக்கீட்டு நியமங்களாகும். கணக்கீட்டு நியமமானது நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதில் ஏற்படக்கூடிய பல்வேறு தடைகளை அகற்றி சரியான நடைமுறைகளை வழிகாட்டுவதே பிரதான நோக்கம் ஆகும்.

## 1995ம் ஆண்டு 15ம் இலக்கக் கணக்கீட்டு கணக்காய்வு நியமங்கள் சட்டம்

- இலங்கை கணக்கீட்டு நியமங்களை உருவாக்கி வெளியிடுவதற்கு பொறுப்பான சட்டமாக இச் சட்டம் காணப்படுகின்றது.
- இச் சட்டத்தின் பிரகாரம் நியமங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பின்வரும் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.



01. கணக்கீட்டு நியமக் குழு
02. இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் பரிசீலனை சபை
03. இலங்கை கணக்காய்வு நியமங்கள் சபை

தொகுப்பு : திரு.ந.குமரகுருபரன், ஆசிரியர் - கணக்கீடு, (யா/வைத்தீஸ்வரா கல்லூரி, யாழ்ப்பாணம்)

கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் பரிசீலனை சபை

## SRI LANKA ACCOUNTING & AUDITING STANDARD MONETARY BOARD

இச் சபையானது 1995ம் ஆண்டு 15ம் இலக்க இலங்கை கணக்கீட்டு கணக்காய்வு சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட விதிமுறைகளுக்கு அமைவாக உருவாக்கப்பட்டது.

**இச் சபையின் தொழிற்பாடுகள்**

- கணக்கீட்டு நியமங்கள் தயாரித்தல், அவற்றை உறுதிப்படுத்தல் தொடர்பாக பட்டயக் கணக்காளர் நிறுவனத்துக்கு ஆலோசனை வழங்குதல்.
- குறிப்பிட்ட நிறுவனங்கள் கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி, நிதிக் கூற்றுக்களை தயாரிக்கின்றனவா? என்பதை பரிசீலனை செய்தல்.
- கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றாத நிறுவனங்கள் மீது தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

## இலங்கை கணக்கீட்டு நியமக் குழு

## ACCOUNTING STANDARD COMMITTEE

⇒ இக் குழுவானது 1995ம் ஆண்டு 15ம் இலக்க இலங்கை கணக்கீட்டு கணக்காய்வு நியமச் சட்டப்படி உருவாக்கப்பட்டது.

⇒ கணக்கீட்டு நியமங்களை தயாரிப்பதற்கும், ஏற்கனவே உள்ள நியமங்களை மறுசீரமைப்பதற்கும், பிரசுரிப்பதற்கும் உதவுகின்ற நிறுவனமாகும்.

தொகுப்பு : திரு.ந.குமரகுருபரன், ஆசிரியர் - கணக்கீடு, (யா/வைத்தீஸ்வரா கல்லூரி, யாழ்ப்பாணம்)

கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம்

## INSTITUTE OF CHARTERED ACCOUNTS OF SRI LANKA

இலங்கையில் கணக்கீட்டு நியமங்களை தயாரிப்பதிலும் அவற்றைப் பராமரிப்பு செய்வதிலும் அதிகாரம் பெற்ற பிரதான நிறுவனமாகும்.

### இவ் நிறுவனத்தின் தொழிற்பாடுகள்

- கணக்காளர் தகைமைகளை பெற்றுக்கொடுப்பதற்கான பாட விதானங்களை உருவாக்கி பரீட்சைகளை நடாத்துதல்.
- கணக்காளர் தகைமை பெறுகின்ற மாணவர்களுக்கான கல்விப் பயிற்சிகள், மேற்பார்வை, கட்டுப்பாடு என்பவற்றை மேற்கொள்ளுதல்.
- கணக்கீட்டு நியமங்களை பேணச் செய்வதற்கான முறைகளை சமூகத்திற்கு அறிமுகப்படுத்துதல்.
- கணக்கீடும் அதற்குரிய பாடங்கள் தொடர்பிலும் ஆய்வுகளை செய்வதற்கு ஊக்கப்படுத்தல்.

தொகுப்பு : திரு.ந.குமரகுருபரன், ஆசிரியர் - கணக்கீடு, (யா/வைத்தீஸ்வரா கல்லூரி, யாழ்ப்பாணம்)

கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



# நிறுவனங்கள் கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றுவதனால் ஏற்படும் அனுகூலங்கள்.

நிதிக் கூற்றுக்களின் நம்பகத்தன்மை அதிகரிக்கின்றது.

நியமங்களைப் பின்பற்றுவதனால் கணக்காளர்களை சட்டப் பிரச்சினைகளில் இருந்து தற்காக்கின்றன.

கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிப்பதில் உள்ள பல்வேறு மாற்றுவழிகளின் அளவைக் கட்டுப்படுத்துகின்றது.

எல்லா விடயங்களிலும் ஏற்றுக்கொள்ளத்தக்க நிதிக் கூற்றுக்களை வெளிவருவதை உறுதி செய்கின்றது.

முகாமையாளர்கள், கணக்காளர்கள் என்பவர்களுக்கு இடையில் ஏற்படும் கருத்து முரண்பாடுகள் தவிர்க்கப்படுகின்றது.

தொகுப்பு : திரு.ந.குமரகுருபரன், ஆசிரியர் - கணக்கீடு, (யா/வைத்தீஸ்வரா கல்லூரி, யாழ்ப்பாணம்)

கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## பயிற்சி

### பொருத்தமான விடையினை எழுதுக.



கணக்கீட்டு நியமங்களை உருவாக்குதல், நடைமுறைப்படுத்தல், மறுசீரமைப்பு செய்தல் என்பவற்றுக்கு பொறுப்பான நிறுவனம் எது? ……………………

கணக்கீட்டு நியமங்களை தோற்றுவிப்பதற்கும், மாற்றுவதற்கும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்திற்கு உதவும் அமைப்பு எது? ……………………

நிதிக் கூற்றுக்களின் பயன்பாட்டாளர்களுக்கு நம்பகரமானதும், தெளிவானதுமான ஒரே மாதிரியான கணக்கீட்டு நடைமுறைகளின் அடிப்படைகளில் நிதிக் கூற்றுக்களை தயாரிக்க வழிகாட்டுவது. ……………………

விசேடமான வணிக நிறுவனங்கள் நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கும் போது கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட்டுள்ளதா என்பதனை பரிசீலனை செய்து பின்பற்றாத போது அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பொறுப்பான நிறுவனம் எது? ……………………

குறிப்பாக இனம் காணப்பட்ட வணிக அமைப்புக்கள் நிதிக் கூற்றுக்களை தயாரித்தல், அவற்றை வெளியிடுதல் போன்ற சந்தர்ப்பங்களில் கணக்கீட்டு நியமங்களின் சிபார்சுகளை பின்பற்ற வேண்டும் என வலியுறுத்தும் சட்டம் எது? ……………………

தொகுப்பு : திரு.ந.குமரகுருபரன், ஆசிரியர் - கணக்கீடு, (யா/வைத்தீஸ்வரா கல்லூரி, யாழ்ப்பாணம்)

கணினி வடிவமைப்பு : திரு.ம.நிதர்ஷன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk